**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, THANJAVUR**
**DEPOSITION OF WITNESS**

| Case No | : | SC.73/2020 | Village | : | கரந்தை |
|---|---|---|---|---|---|
| Prosecution witness | : | PW - 18 | Taluk | : | |
| Name | : | சகானா | Occupation | : | |
| Father Name | : | பரணிதரன் | Age | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 14.02.2025**

**Accused A 1, A2, A 4, to A7, A9, A10 present. Accused A3, A8, A11 absent. U/sec.355 BNSS petition filed and allowed.**

**அரசு தரப்பில் முதல் விசாரணை:**

நான் தற்போது திருப்பழனம் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.10.2019ம் தேதி நான் நடுக்காவேரி கிராம நிர்வாக அலுவலராக பணியிலிருந்தபோது காலை 8.30மணிக்கு நடுக்காவேரி காவல் நிலையபோலிசார் எனக்கு போன் செய்து 3 எதிரிகளை கஷ்டடியில் வைத்திருப்பதாகவும் அவர்களிடம் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்ய சாட்சியாக இருக்குமாறு என்னை அழைத்தார். நான் தாசில்தாருக்கு போன் செய்து அனுமதி பெற்று காவல் நிலையம் வந்தேன். நான் காவல் நிலையம் செல்லும் போது ஓய்வு பெற்ற நடுக்காவேரி மேற்கு கிராம உதவியாளர் நாகராஜ் என்பவரையும் உடன் அழைத்துச்சென்றேன். காவல் நிலையத்தில் தங்கதுரை, சரவணன், பன்னீர்செல்வம் ஆகிய 3 எதிரிகள் இருந்தார்காள். நீதிமன்றத்தில் தங்கதுரை இன்று ஆஜரில் உள்ளார். மற்ற இரண்டு நபர்கள் இன்று ஆஜரில் இல்லை. ஆய்வாளர் எங்கள் முன்பாக எதிரி தங்கதுரை தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதை ஆய்வாளர் கணிணியில் தட்டச்சு செய்தா’. பின்னர் படித்து காட்டி தங்கதுரையிடம் கையொப்பம் வாங்கினார்கள். நானும் நாராஜும் கையொப்பம் செய்தோம். பின்னர் ஆய்வாளர் கையொப்பம் செய்தார். பின்னர் எதிரிகள் சரவணன், பன்னீர் செல்வம் ஆகியோர்கள் தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலங்களை ஆய்வாளர் தனித்தனியாக பதிவு செய்து அதில் எதிரிகள் மற்றும் சாட்சிகளாகிய எங்களிடம் கையொப்பம் வாங்கினார்கள். பின்னர் எதிரிகள் மூவரும் மலர்கொடி என்பவர் வீட்டை காண்பிப்பதாக சொன்னார்கள். நான் மலர்கொடியின் வீட்டிற்கு செல்லவில்லை. மதியம் 2மணிக்கு நான் நடுக்காவேரி கிராம நிர்வாக அலுவலகத்திற்கு வந்துவிட்டேன். என்னை ஆய்வாளர் விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் நடுக்காவேரில் கிராமத்தில் சம்வத்தின்போது குடியிருக்கவில்லை. கிராம நிர்வாக அலுவலர் பணிபுரியும் கிராமத்தில் குடியிருக்க வேண்டும் என்பது விதி என்றால் சரிதான். நான் காவல் நிலையம் செல்லும் போது தங்கதுரை, பன்னிர் செல்வம், சரவணன் ஆய்வாளரின் இருக்கைக்கு அருகில் உட்கார்ந்திருந்தார்கள். நான் சென்றவுடன் எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுப்பார்கள் என்று ஆய்வாளர் சொன்னார். நான் தங்கதுரை, பன்னீர் செல்வம், சரவணன் ஆகியோர்களை காவல் நிலையத்தில் பார்க்கவில்லை என்றாலும் அவர்கள் எந்தவித ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் நடுக்காவேரி காவல் நிலையத்தில் எந்த கையெழுத்தும போடவில்லை என்றாலும் என்னையும் நாகராஜையும் திருவையாறு காவல் நிலையத்திற்கு அழைத்து கையெழுத்து மட்டும் வாங்கினார்கள் என்றால் சரியல்ல. நான் நடுக்காவேரி காவல் நிலையத்திற்கு காலை 9மணிக்கு சென்றேன்.

நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர். (மு.கூ.பொ)